Tamil:Layout 1 03/11/11 1:24 PM Page 1



# மனித உரிமைகள் தொடர்பான பல்வேறு விவகாரங்களில் காவல் துறையினர்களுக்கான வழிகாட்டு நெறிகள்

सर्वे
भवन्तु सुखिनः

## தேசிய மனித உரிமைகள் ஆணையம்
## இந்தியா

Tamil:Layout 1 03/11/11 1:24 PM Page 2

# மனித உரிமைகள் தொடர்பான பல்வேறு விவகாரங்களில் காவல் துறையினர்களுக்கான வழிகாட்டு நெறிகள்

**தேசிய மனித உரிமைகள் ஆணையம்**
ஃபரித்கோட் ஹவுஸ், கோபர்னிகஸ் மார்க்,
புது தில்லி - 110 001

Tamil:Layout 1 03/11/11 1:24 PM Page 3

# Guidelines for Police Personnel on Various Human Rights Issues (In Tamil)

**First Edition:** 10 December 2010
© 2010 National Human Rights Commission

**National Human Rights Commission**
Faridkot House, Copernicus Marg, New Delhi-110 001

**Printed at: Shri Ganesh Associats**
C-83/11, Street No. 7, Mohanpuri, Moajpur, Delhi - 110 053

# பொருளடக்கம்


| வ. எண் | அத்தியாயம் | பக்க எண் |
|---|---|---|
| | முன்னுரை | 1-4 |
| 1. | கைது | 5-12 |
| 2. | காவல் வைப்பு | 13-15 |
| 3. | பெண்களின் பாதுகாப்பு | 16-18 |
| 4. | குழந்தைகளின் பாதுகாப்பு | 19-22 |
| 5. | தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் உரிமைகள் பாதுகாப்பு | 23-25 |
| 6. | மூத்த குடிமக்களின் உரிமைகள் பாதுகாப்பு | 26-28 |
| 7. | சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாப்பு | 29-31 |
| 8. | கட்டாய/கொத்தடிமை தொழிலாளர்களும் காவல் பணியும் | 32-33 |
| 9. | என்கவுன்டெர் | 34-37 |
| 10. | தீவிரவாதமும் காவல் பணியும் | 38-41 |

# முன்னுரை

மனித உரிமைகள் தொடர்பான விவகாரங்களும் காவல் பணியும் ஒரு நாட்டிற்கும் அதன் குடிமக்களுக்கும் மிகவும் முக்கியம் வாய்ந்ததென தேசிய மனித உரிமைகள் ஆணையம் கருதுகிறது.

இன்றைய கால கட்டத்தில் காவலர்களின் கடமை சட்டத்தை நிலை நிறுத்துவது, குற்றத் தடுப்பு மற்றும் விசாரணை முதலிய எல்லைகளையும் கடந்து நீள்கிறது. அவர்கள் மனிதனின் அடிப்படை உரிமையான உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாப்பதோடு மட்டுமில்லாமல் சிறுபான்மையானர், சமுதாயத்தின் வசதி வாய்ப்புகள் குறைந்த பிரிவினர், பெண்கள் முதலானவர்களுக்கு எதிரான பாரபட்சங்களை நீக்கும் நோக்கத்துடனான முக்கியத்துவம் வாய்ந்த சமூக சட்ட திட்டங்களை

நடைமுறைப்படுத்துவதையும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

காவலர்கள் வரையறுக்கப்பட்ட மனித உரிமைகள் பற்றிய தெளிவு பெற்றிருந்தால் மட்டுமே அப்படிப்பட்ட பணிகளை சிறப்பான முறையில் நிறைவேற்ற இயலும். காவலர்கள் இயல்பாகவே தங்கள் பணியின் தன்மைக்கேற்றவாறு குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களையும் சட்டம் பற்றிய குழப்பத்தில் இருக்கும் மக்களையும் ஒருசேர கையாள வேண்டியிருக்கிறது. ஆகவே காவலர்கள் தனிப்பட்டவர்களின் உரிமைகளில், குறிப்பாக சமுதாயத்தின் முக்கியத்துவம் குறைந்த பிரிவினரின் உரிமைகளில் கவனமாக இருப்பதுடன் தங்கள் கடமைகளைச் செய்யும் பொழுது அவர்களை கண்ணியத்துடனும் நடத்தவேண்டும். அகன்ற கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது மனித உரிமைகளை மதிப்பது என்பது வெறும் கடமை மட்டுமல்ல, மாறாக

உண்மையில் அவைகள் காவலர்களுக்கு சட்டத்தை திறம்பட அமலாக்குவதில் உதவி புரிகின்றன.

ஆணையமானது ‘‘மனித உரிமைகள் தொடர்பான பல்வேறு விவகாரங்களில் காவல் துறையினர்களுக்கான வழிகாட்டு நெறிகள்’’ என்னும் இந்த சிறு புத்தகத்தை நமது காவல் படையின் பெரும் பகுதியை அமைக்கும், பல சந்தர்ப்பங்களில் மனித உரிமைகளை பாதுகாப்பதில் தாங்கள் முதல் ஆளாக இருக்க வேண்டிய நிலைக்குள்ளாகும் கடைநிலை காவலர்களுக்காக வெளியிடத் தீர்மானித்திருக்கிறது. இந்த சிறு புத்தகமானது அவர்கள் தங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உறுதுணையாக இருக்க முயற்சிக்கிறது. இந்த புத்தகத்தில் இடம் பெற்றுள்ள கருத்துக்கள் வடிவாக்கத்திலும் முதல் சில அத்தியாயங்களை எழுதியதற்கும் மற்றும் இந்த புத்தகத் தொகுப்பிலும் தே.ம.உ.ஆ ஆராய்ச்சி அதிகாரி

டாக்டர். அபர்னா ஸ்ரீ வத்சவா

அவர்களின் பெரும் முயற்சியை பாராட்டி பதிவுசெய்ய ஆணையம் விழைகிறது. இதர அத்தியாயங்களை எழுதியதில் புலன்விசாரணைப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் தங்கள் பங்கை அளித்துள்ளனர். இந்த பணியானது திரு. சத்திந்தர் பால் சிங், இ.கா.ப, டி.ஐ.ஜி., தேசிய மனித உரிமைகள் ஆணையம். அவர்களின் மேற்பார்வையின் கீழும், திரு. சுனில் கிருஷ்ணா, இ.கா.ப., டைரக்டர் ஜெனரல் (புலனாய்வு) அவர்களின் ஒட்டுமொத்த வழிகாட்டுதலிலும் மேற்கொள்ளப்பட்டது.



நாள் : 10, டிசம்பர்

**பி. சி. ஷர்மா**

உறுப்பினர்

தேசிய மனித உரிமைகள் ஆணையம்

# அத்தியாயம் – 1

## கைது

சில சூழ்நிலைகளில் மக்களை கைது செய்வதற்கும், தேவைப்பட்டால் வலுவைப் பயன்படுத்தி அவ்வாறு செய்வதற்கும் சட்டம் காவல் துறையினர்க்கு அதிகாரம் வழங்கியுள்ளது.[1]

முன்னெச்சரிக்கை கைதுகள் மற்றும் சிறுகுற்றங்களுக்கான கைதுகள் ஆகியவற்றின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகமாக இருந்ததும், விசாரணைக் கைதிகளாக இருப்பவர்களின் சதவீதம் வழக்கத்திற்கு மாறாக மிக அதிகமாக இருந்ததும், அதிலும் அவர்களில் பெரும்பாலானவர்கள் பிணையில் வெளியே வர அல்லது உத்தரவாதம் கொடுக்க இயலாத காரணத்தாலேயே அங்கு இருப்பவர்கள் என்றும்

**1. பிரிவு 46 – சி.ஆர்.பி.சிச்**

2. Law commission of India - Consultation paper on Law relating Arrest, Nov. 2000.

ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. 2

கைதும் காவல் வைப்பும் ஒரு மனிதனின் நற்பெயருக்கு கணக்கிட இயலாத களங்கத்தை ஏற்படுத்துகிறது துரதிர்ஷ்டவசமாக நமது அமைப்பு தேவையில்லாமல் கைது செய்யப்பட்டவர்களின் இழப்பீட்டிற்கு எந்த வழி வகையும் கொண்டிருக்கவில்லை.

## செய்ய வேண்டுவன

1. சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட வழிமுறைக்கு இணங்க அல்லாது எந்த ஒரு நபருக்கும் அவருடைய வாழ்வுரிமை அல்லது தனிமனித சுதந்திரம் மறுக்கப்படக்கூடாது என்பதை உறுதி செய்க. (எண்–21 இந்திய அரசியலமைப்புச் சட்டம்).

2. கைது நடவடிக்கையில் ஈடுபடும் காவல் அதிகாரி இன்னாரென்ற அடையாளம் பெயர் பட்டை மற்றும் பதவி (Rank) மூலமாக தெளிவாக

குறிப்பிடப்பட்டிருப்பதை உறுதி செய்க. (கைது நடவடிக்கைக்கான வழிகாட்டு நெறிகள்: டீ. கே. பாசு எதிர் மேற்கு வங்க மாநிலம் ஏ.ஐ.ஐர் 1997 எஸ்.சி 610).

3. கைதானவர் தான் என்ன காரணத்திற்காக கைது செய்யப்பட்டார் என்னும் முழு விவரம் தெரிவிக்கப் பட்டிருப்பதை உறுதி செய்க. (எண்–22 இந்திய அரசியலமைப்புச் சட்டம்).

4. கைதானவரின் உறவினர்க்கோ அல்லது நண்பருக்கோ கைது பற்றிய உண்மை நிலவரம் மற்றும் கைதானவர் எங்கு காவலில் வைக்கப்படுகிறார் என்னும் விஷயம் தெரியப்படுத்தப்படுவதை உறுதி செய்க. (பிரிவு 50 அ (1) சிஆர்பிசி).

5. கைது தொடர்பான தகவல்களும் தகவல் தெரிவிக்கப்பட்ட நபர் குறித்த விவரமும் காவல் நிலையத்தில் அதற்குண்டான பதிவேட்டில் குறிக்கப்படுவதை உறுதி செய்க. (பிரிவு 50 அ (3)

சிஆர்பிசி).

6. கைது செய்யப்பட்ட சமயத்தில் கைதானவரின் உடலில் காயங்கள் ஏதேனும் காணப்பட்டால் அவை பற்றி கைது குறிப்பாணையில் குறிக்கப்படுவதையும் கைதானவர் மருத்துவப் பரிசோதனை செய்யப் படுவதையும் உறுதி செய்க.

7. எந்த ஒரு பெண்ணும், தவிர்க்க இயலாத சூழ்நிலைகளை தவிர, சூரிய உதயத்திற்கு முன்பும் சூரிய அஸ்த்தமனத்திற்கு பிறகும் கைதுசெய்யப்படுவதை தவிர்ப்பதை உறுதி செய்க. (பிரிவு 46 (4) சிஆர்பிசி).

8. ஒரு பெண் கைது செய்யப்படும் பொழுது பெண் காவல் அதிகாரி ஒருவர் கூட இருப்பதை உறுதி செய்க. (பிரிவு 46 (4) சிஆர்பிசி).

9. எந்த ஒரு சூழ்நிலையிலும் இளையோர் அல்லது சிறுவர்களைக் கைது செய்யும்பொழுது

பலப்பிரயோகத்தையோ அடிப்பதையோ தவிர்ப்பதை உறுதி செய்க. இளையோர் அல்லது சிறுவர்களைக் கைது செய்யும்பொழுது மரியாதைக்குரிய பிரஜை ஒருவர் கூட வைத்துக்கொள்ளப்படலாம்.

10. கைது செய்யப்படும் நபரின் மனித கண்ணியம் காக்கவும், பொதுவில் காட்சிப்படுத்துவதும் அணிவகுப்பில் ஈடுபடுத்துவதும் கூடாது.

11. கைது செய்யப்பட்ட நபரின் சோதனையை அவரின் மனித மாண்புக்கு உரிய மரியாதையுடன் நடத்துக. தேவையற்ற பலப் பிரயோகத்தை தவிர்க்கவும். அவருடைய தனிமைக்கு (Privacy) உரிய மதிப்பளிக்கவும். பெண்களை சோதனையிடுவது கண்டிப்பாக மற்றொரு பெண்ணால்தான், நாகரீகத்தை சுடும் கவனத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும். (பிரிவு 51 (அ) சிஆர்பிசி).

12. பிணையில் விடுவிக்கப்படக்கூடிய குற்றமாக இருக்கும் பட்சத்தில் கைது செய்யப்பட்ட நபருக்கு அவரின் பிணையில் விடுவிக்கப்படக்கூடிய உரிமை பற்றிய தகவலை அவர் பிணைக்கான ஏற்பாடுகளை செய்ய ஏதுவாக அவருக்கு தெரிவிக்கவும்.

13. கைது பற்றியும் காவலில் வைக்கப்பட்டிருக்கும் இடம் பற்றியும் காவல் கட்டுப்பாட்டு அறைக்ககும் மாவட்ட/மாநிலத் தலைமையகத்திற்கும் தகவல் தெரிவிக்கவும்.

## செய்யக் கூடாதன

1. விசாரணை செய்யப்பட்டதன் அடிப்படையில், அறிவுக்கெட்டிய வகையில், நியாயமான திருப்தியுடன் ஒரு நபருக்கு, மேல் நடவடிக்கைக்கு ஆளாகக்கூடிய குற்றச் செயல்களில் தொடர்பு இருந்து அவரைக் கைது செய்ய வேண்டிய அவசியம் இருந்தாலன்றி

வாரண்ட் இல்லாமல் அந்த நபரைக் கைது செய்யக்கூடாது (பிரிவு 41, சிஆர்பிசி).

2. குற்ற இழைப்பை தடுப்பதற்கு வேறு வழியில்லை என்னும் நிலையினாலன்றி ஒரு நபரைக் கைது செய்யக்கூடாது (பிரிவு 151, சிஆர்பிசி).

3. கைது செய்யப்பட்ட நபரை பிடியில் வைத்திருக்க எந்த அளவிற்குப் பலம் தேவையோ அதற்கு அதிகமான பலத்தைப் பிரயோகம் செய்யக்கூடாது. (பிரிவு 49, சிஆர்பிசி மற்றும் ஆர்ட். 21 இந்திய அரசியமைப்புச் சட்டம்).

4. 15 வயதுக்குக் கீழுள்ள, வழக்குடன் தொடர்புடைய ஒரு பெண்ணையோ அல்லது ஒரு ஆணையோ காவல் நிலையத்திற்கு அழைப்பாணை விடுக்காதீர்கள். அப்படிப்பட்ட ஒரு நபரிடம் (பெண்/ இளையோர்) அவரின் வசிப்பிடத்தில் வைத்து மட்டும்தான் விசாரணை நடத்தப்படலாம் (பிரிவு 160 (1) சிஆர்பிசி).

5. குற்றவியல் நீதிபதி ஒருவரின் எழுத்து பூர்வ உத்தரவின்றி கைது செய்யப்பட்ட நபரை 24 மணி நேரத்திற்கு அப்பாற்பட்டு காவலில் வைக்கக்கூடாது (பிரிவு 57, சிஆர்பிசி).

6. கைவிலங்கு மற்றும் கால்விலங்குகளைப் பயன்படுத்த, பதிவு செய்யப்பட்ட காரணங்களும் நீதிமன்ற உத்தரவும் பெறப்பட்டிருந்தாலன்றி கைது செய்யப்பட்ட நபரிடம் அவைகளைப் பிரயோகிக்கக் கூடாது.

❖❖❖

# அத்தியாயம் - 2
# காவல் வைப்பு

விசாரணைக்காக, அடையாளம் சரிபார்க்கும் நோக்கத்திற்காக, ஆல்கஹால் அளவைச் சோதிக்க முதலியவற்றிற்காக காவலரால் காவலில் எடுக்கப்பட்ட ஒரு நபர் காவல் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறார் ஆகையால் மாநிலத்தின் அக்கறையில் வருவதாகிறது. தன் கட்டுப்பாட்டில் வரும் அனைத்து நபர்களின் மனித உரிமைகள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது ஒரு மாநிலத்தின் கடமையாகும்.

## செய்ய வேண்டுவன

1. விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு வரவழைக்க வேண்டியுள்ள எந்த ஒரு நபருக்கும் எழுத்து மூலமான உத்தரவு அனுப்பப்படுவதை உறுதி செய்க. (பிரிவு 160 (1) சிஆர்பிசி).

Tamil:Layout 1 03/11/11 1:24 PM Page 18

2. காவலில் எடுக்கப்பட்ட எந்த ஒரு நபரின் குடும்ப உறுப்பினர்களோ அல்லது நண்பர்களோ அவர் எங்கு வைக்கப்பட்டிருக்கிறார் என்பது பற்றி அறிந்திருப்பதை உறுதி செய்க.

3. எந்த ஒரு நபரும் காவல் நிலையத்தில் எப்பொழுதெல்லாம் காவலில் வைக்கப்படுகிறாரோ அப்பொழுதெல்லாம் அது பற்றி பொதுக் குறிப்பேட்டில் சரிவாரக் குறிக்கப்படுவதை உறுதி செய்க.

4. காவலில் வைக்கப்பட்டிருக்கும் எந்த ஒரு நபருக்கும் தேவை ஏற்படும் பட்சத்தில் மருத்துவ சேவை உரிய நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்க.

5. காவலில் வைக்கப்பட்டிருக்கும் அனைவரையும் எந்த ஒரு மனிதனுக்கும் உரித்தான கண்ணியத்துடன் நடத்தவும்.

# செய்யக் கூடாதன

1. காவலில் வைக்கப்பட்டிருக்கும் எந்த ஒரு நபரையும் சித்ரவதை அல்லது கொடுமைக்கோ மனிதாபிமானமற்ற அல்லது தரக்குறைவாக நடத்துதலுக்கோ அல்லது தண்டனைக்கோ ஆளாக்காதீர்கள்.

2. காவலில் இருக்கும் ஒரு நபரை குற்றத்தை ஒப்புக்கொள்ளச் சொல்லி வற்புறுத்துவதையோ இல்லையெனில் அவரையே குற்றவாளி ஆக்குவதையோ அல்லது வேறு எந்த நபருக்கும் எதிரான சாட்சி ஆக்குவதையோ செய்யாதீர்கள்.

3. விசாரணை என்ற பெயரில் எந்த நபரையும் நீண்ட நேரம் காவலில் வைத்திருப்பது அந்த நபரை துன்புறுத்துவதாகவும் தவறாக காவல் வைத்ததாகவும் ஆகிவிடும் என்பதால் அவ்வாறு செய்யாதீர்கள்.

❖❖❖

# அத்தியாயம் - 3

## பெண்களின் பாதுகாப்பு

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பெண்களுக்கு சமத்துவத்தை உறுதிப்படுத்தகிறது. பெண்களுக்கு எதிரான குற்றம் என்பது எப்பொழுதுமே ஒரு முக்கிய விவகாரமாகவே இந்தியாவில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இருந்து வருகிறது.[3]

## செய்ய வேண்டுவன

1. ஒரு பெண் இன்னொரு பெண்ணால் மட்டுமே, அவருடைய தனிமைக்கும் (Privacy) நாகரீகத்திற்கும் கடும் கவனம் அளித்து சோதனையிடப்படுவதை உறுதி செய்க. (பிரிவு 51 (2) சிஆர்பிசி).

2. சந்தேகத்திற்குரிய பெண் நபர் காவல் நிலையத்தில் தனி அறையில் வைக்கப் படுவதை

உறுதி செய்க. (உச்ச நீதிமன்ற தீர்ப்பு, ஷீலா பர்சே எதிர் மஹாராஷ்ட்ர மாநிலம்).

3. ஒரு பெண்ணைக் கைது செய்யும் நடவடிக்கையின்போது கூடுமானவரை ஒரு பெண் காவல் அதிகாரி கண்டிப்பாக கூட வைத்துக் கொள்ளப்பட வேண்டும் (பிரிவு 51 (2) சிஆர்பிசி).

4. உங்கள் கவனத்திற்கு வரும் எந்த ஒரு குடும்ப வன்முறை நிகழ்வையும் எஸ்.எச்.ஓ-வுக்குத் தெரிவிக்கவும்.

5. குற்றச் செயல்களால் பாதிப்புக்குள்ளான பெண்களிடம், குறிப்பாக வன்புணர்ச்சி மற்றும் பாலியல் வன்முறைக்கு ஆளான பெண்களிடம் இரக்கம் மற்றும் அவர்களது தனிமைக்கு (Privacy) உரிய மரியாதை கொடுத்து நடக்கவும்.

6. குடும்ப வன்முறை தொடர்பான விவகாரங்களில் தொல்லைக்குள்ளான பெண்ணிடம் “பாதுகாப்பு ஆணை” மூலம் நிவாரணம் பெறக்கூடிய அவருடைய உரிமையை

அவருக்கு எடுத்துச் சொல்லவும்.[4]

## செய்யக் கூடாதன

1. வழக்குடன் தொடர்புடைய ஒரு பெண்ணை காவல் நிலையத்திற்கு வரவழைக்காதீர்கள். எந்த ஒரு பெண்ணிடமும் விசாரணையானது அந்தப் பெண்ணின் வசிப்பிடத்தில் மட்டும் தான் செய்யப்பட வேண்டும். (பிரிவு 160 (1) சிஆர்பிசி).

2. பெண் ஒருவரை, தவிர்க்க இயலாத சூழ்நிலைகளைத் தவிர, சூரிய உதயத்திற்கு முன்பும் சூரிய அஸ்த்தமனத்திற்குப் பிறகும் கைது செய்யக்கூடாது. (பிரிவு 46 (4) சிஆர்பிசி).

❖❖❖

3. 2007-ம் ஆண்டில் மொத்தமாக பெண்களுக்கு எதிரான குற்ற நிகழ்வுகள் 1,85,312 புகார் செய்யப்பட்டிருக்கின்றன (இ.த.ச மற்றும் எஸ்.எல்.எல் இரண்டின் கீழும்)

4. பிரிவு 5, குடும்ப வன்முறைகளில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005.

# அத்தியாயம் - 4

## குழந்தைகளின் பாதுகாப்பு

இந்திய அரசியலமைப்புச் சட்டம் - பகுதி III (அடிப்படை உரிமைகள்) மற்றும் பகுதி IV (டைரக்டிவ் பிரின்சிபில்ஸ் ஆஃப் ஸ்டேட் பாலிஸி) குழந்தைகளின் வாழ்வு, வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு முதலியவற்றிற்குண்டான வழிவகைகளை கொண்டிருக்கிறது.

இளையோர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2000, 18 வயது வரை உள்ள குழந்தைகள்/சிறுவர்கள் பாதுகாப்பிற்கு நாடு முழுமைக்கும் நீதி குறித்த ஒரு சீரான சட்டபூர்வ அடிப்படைக் கட்டமைப்பை வழங்குகிறது.

## செய்ய வேண்டுவன

1. சிறுவர்களை பணிவாக நடத்தவும், சாதாரண (சிவில்) உடை அணிந்து கொண்டிருக்கும் பொழுது மட்டும் அவர்களிடம் விசாரணை நடத்தவும்.

2. ஒரு சிறுவரிடம் கேள்வி (விசாரணை)

கேட்கப்பட வேண்டும் என்றால் அவர் சாதாரணமாக வசிக்கும் இடத்தில் வைத்துதான் கேள்வி கேட்கப்பட வேண்டும். (பிரிவு 160 சிஆர்பிசி).

3. சட்டத்துடன் முரண்பாட்டில் உள்ள ஒரு இளையோர் காவலரால் கைது செய்யப்பட்ட உடன் சிறப்பு இளையோர் காவல் பிரிவின் கட்டுப்பாட்டிலோ அல்லது அதற்கென நியமிக்கப்பட்ட காவல் அதிகாரியின் கட்டுப்பாட்டிலோ விடப்படுவதை உறுதி செய்க. (இளையோர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2000).

4. கைது செய்யப்பட்ட நிலையில் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி தீர்மானம் செய்யும் முன் சிறுவரின் வயதை சரிபார்க்கவும்.

5. கைது செய்யப்பட்ட நிலையில் சிறுவரை தாமதிக்காமல் இளையோர் நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்துவதை உறுதி செய்க. எந்த நிலையிலும் எடுத்துக் கொள்ளப்படும் நேரம் 24 மணி நேரத்திற்கு மிகக் கூடாது. (பிரிவு 57 சிஆர்பிசி).

6. தொழிற்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் ஆபத்து நிறைந்த பணிகளில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது தடை செய்யப்பட்ட ஒன்றாகும். (ஆர்டிகிள் 24, இந்திய அரசியலமைப்பு சட்டம்).

அப்படிப்பட்ட நடப்புகள் எதுவாயினும் அதை அடையாளம் கண்டு அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கவும். (பிரிவு 3 குழந்தைத் தொழிலாளர் தடுப்பு மற்றும் முறைப்படுத்தல் சட்டம் 1986).

7. எந்த சிறுவராவது கொத்தடிமையாக வைக்கப்பட்டிருந்தால் அவர் விடுவிக்கப்படத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். (கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம் 1976).

8. குழந்தைத் திருமணம், இந்துக்கள் திருமணச் சட்டம் 1955-ன் படி தடை செய்யப்பட்ட ஒன்றாகும். அதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும்.

## செய்யக் கூடாதன

1. எந்த பெண் குழந்தையையும் விசாரணை

நடத்துவதற்காகக் காவல் நிலையத்திற்கு வரவழைக்காதீர்கள். (பிரிவு 160 சிஆர்பிசி).

2. 15 வயதிற்குக் கீழுள்ள எந்த ஆண் குழந்தையையும் காவல் நிலையத்திற்கு வரவழைக்காதீர்கள் (பிரிவு 160 சிஆர்பிசி).

3. இளையோரை போலீஸ் லாக்-அப்பில் வைக்காதீர்கள் (பிரிவு 18, இளையோர் நீதிச் சட்டம் 1986).

4. 7 (ஏழு) வயதிற்குக் கீழுள்ள குழந்தையைக் கைது செய்யாதீர்கள்.[5]

5. கைது செய்யப்பட்ட ஒரு இளையோரின் அடையாளத்தை ஊடகங்களுக்கு வெளியிடாதீர்கள்.

6. குற்றம் ஒன்றாக இருந்தாலும் ஒரு இளையோரை வயதிற்கு வந்த ஒரு நபருடன் இணைத்து குற்ற அறிக்கையில் சேர்க்காதீர்கள்.

(5) [5]7 (ஏழு) வயதிற்குக் கீழுள்ள ஒரு குழந்தையால் செய்யப்படும் எதுவும் (எந்த குற்றமும்) ஒரு குற்றமே அல்ல. (பிரிவு 82 இ.த.ச)

❖❖❖

# அத்தியாயம் - 5

## தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் உரிமைகள் பாதுகாப்பு

2001-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் இரு பிரிவினருமாகச் சேர்ந்து இந்திய மக்கள் தொகையில் 24 சதவீதமாக, இவற்றில் தாழ்த்தப்பட்டோர் 16 சதவீதத்திற்கும் அதிகமாகவும் பழங்குடியினர் 8 சதவீதத்திற்கு அதிகமாகவும் இருக்கின்றனர். தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 ஆனது, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் குற்றங்களைத் தடுக்கவும் அவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கவும் உருவாக்கப்பட்ட ஒரு சிறப்பான சட்டப் பிரிவாகும்.

## செய்ய வேண்டுவன

1. எஸ்சி/எஸ்டி சமூகத்தைச் சேர்ந்த மனிதர்களை சட்டத்திற்கு முன் சமமாக நடத்தவும் (ஆர்ட். 14, இந்திய அரசியலமைப்பு).

2. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (வன் கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989-ன் கீழ் நிகழ்த்தப்படும் குற்றம் தொடர்பான அனைத்து தகவல்களையும் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தின் பொறுப்பில் இருக்கும் அதிகாரிக்குத் தெரிவிக்கவும்.

3. உங்களது அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதியில் உள்ள எஸ்சி/எஸ்டி சமூகத்தைச் சேர்ந்த மக்களை தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (வன் கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989-ன் கீழ் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு பற்றி நன்கு அறிந்தவர்களாக ஆக்குங்கள்..

## செய்யக் கூடாதன

1. எந்தக் குடிமகனையும் அவனுடைய/அவளுடைய சாதியின் அடிப்படையில் வேறுபடுத்தாதீர்கள் (ஆர்ட். 15, இந்திய அரசியலமைப்பு).

2. காவல் கட்டுப்பாட்டில் எடுக்கப்பட்டிருக்கும் நபர்கள், குறிப்பாக எஸ்சி/எஸ்டி சமூகத்தைச் சேர்ந்த நபர்கள் எந்த வித தரக்குறைவாக நடத்தப்படுவதற்கும் ஆளாக்காதீர்கள். (ஆர்ட். 21, இந்திய அரசியலமைப்பு).

3. எவர் ஒருவரும் தீண்டாமையை ஊக்கப்படுத்துவதையோ கடைப்பிடிப்பதையோ அனுமதிக்காதீர்கள். (ஆர்ட். 17, இந்திய அரசியலமைப்பு).

❖❖❖

# அத்தியாயம் - 6

## மூத்த குடிமக்களின் உரிமைகள் பாதுகாப்பு

மனிதனின் வாழ்க்கைச் சுழற்சியில் வயது முதிர்தல் என்பது மாற்றமே இல்லாமல் நடக்கக்கூடிய ஒரு இயற்கை நிகழ்வாகும். வயது முதிர்ந்தோரின் வாழ்வில் அது தன்னுடன் பெரும் சவால்களை, குறிப்பாக மனித உடல் உறுப்புக்களின் செயல்படும் தன்மையில் சிறுகச் சிறுக குறைபாட்டுடன் கொண்டுவருகிறது. அனைத்து குடிமகன்களுக்கும் குறிப்பாக காவலர்களுக்கும் மூத்த குடிமக்களின் (வயது 60 ம் அதற்கு மேலும்) உரிமைகளைப் பாதுகாப்பதில் ஒரு நீதி சார்ந்த கடமை இருக்கிறது.[6]

# செய்ய வேண்டுவன

1. வயது முதிர்ந்த தாய் தந்தையர், அவர்கள் தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ள இயலாத நிலையில் அவர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டியது அவர்களுடைய குழந்தைகளின் கடமையாகிறது. (பிரிவு 125, சிஆர்பிசி).

2. உங்கள் காவல் பகுதியில் உள்ள மூத்த குடிமக்களுடன், அவர்களுடைய, எளிதில் தொல்லைகளுக்கு ஆளாகக்கூடிய நிலையைக் கருத்தில் கொண்டு அவர்களுடன் முறையாக தொடர்பில் இருக்கவும்.

3. மூத்த குடிமகன் ஒருவரை தவிர்க்க இயலாமல் கைது செய்ய நேரிடும்பொழுது அவருக்கு உரிய பணிவளித்து, எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக மருத்துவப் பரிசோதனைக்கு ஆட்படுத்தவும்.

4. மூத்த குடிமகன் ஒருவர் எப்பொழுது காவல் நிலையத்திற்கு வந்தாலும் அவருக்கு உரிய மரியாதை அளித்து அவருடைய பிரச்சனைக்கு முன்னுரிமை கொடுக்கவும்.

## செய்யக் கூடாதன

1. முழுமையான தேவை இருந்தாலன்றி மூத்த குடிமகன் ஒருவரை கைதோ அல்லது காவலில் வைக்கவோ செய்யாதீர்கள்.

2. சட்டம் ஒழுங்குப் பிரச்சனையில் பிடிபட்ட மூத்த குடிமக்களிடம் முரட்டுத்தனமாகவோ கொடூரமாகவோ நடந்து கொள்ளாதீர்கள்.

6. வயதானோர் குறித்த தேசியக் கொள்கை, 60 உம் அதற்கு மேற்பட்ட வயதும் உடையோரை மூத்த குடிமகன் என்று அடையாளப்படுத்துகிறது.

❖❖❖

# அத்தியாயம் - 7

## சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாப்பு

நம்முடைய அரசியலமைப்பின் கூறுகள் 14, 15 மற்றும் 16 ஆகியவற்றின் கீழ் மதங்களின் அடிப்படையில் வேறுபாடு காட்டுவது தடை செய்யப்படுகிறது. மேலும் அரசியலமைப்பின் கூறுகள் 29 மற்றும் 30 சிறுபான்மையினரின் கல்வி மற்றும் பண்பாட்டு உரிமைகளைக் கையாள்கிறது.[7]

## செய்ய வேண்டுவன

1. சிறுபான்மையினர் குறித்த விவகாரங்களை உரிய எச்சரிக்கையுடனும் உணர்வு பூர்வமாகவும் கையாளுங்கள்.

2. வழிபாட்டுத் தளங்களுக்கு முறையாக வருகை மேற்கொண்டு அங்கு சமூக இறுக்கத்தை ஏற்படுத்திக் காத்திருக்கும் விஷ மக்காரர்களைக் கண்காணித்து வரவும்.

3. விழாக் காலங்களில் கூடுதல் கண்காணிப்புடன் இருந்து சமூகக் கலவர வாய்ப்புள்ள பகுதிகளில் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

4. சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களின் வீடுகள், வழிபாட்டுத் ஸ்தலங்கள் அல்லது நிறுவனங்களுக்குச் செல்லும் பொழுது அவர்களுடைய மனப்பான்மைக்கும் மதத் தொடர்புடைய பழக்க வழக்கங்களுக்கும் உரிய மரியாதை கொடுக்கவும்.

5. சிறுபான்மை சமூகத்தினரிடையில் செல்வாக்கு மிக்க மனிதர்களிடம் முறையாகத் தொடர்பு வைத்துக்கொள்ளவும். அவர்களின் ஆதரவு, கலவரமான சூழ்நிலைகளில் கைகொடுக்கும்.

6. எந்த மதத்தையும் பின்பற்றவும் அதை வெளிப்படையாக அறிவிக்கவும் மக்களுக்கு உள்ள சுதந்திரத்தை உறுதிப்படுத்தவும். (கூறு. 25 (1), இந்திய அரசியலமைப்பு)

7. அனைத்து மதத்தையும் சேர்ந்த முக்கிய நபர்களிடம் இணக்கமாக இருக்கவும்.

## செய்யக் கூடாதன

1. எந்த மதப்பிரிவினர் சம்பந்தப்பட்ட விவகாரங்களைக் கையாளும்பொழுதும் பாகுபாடு காட்டாதீர்கள்.

2. மதத்தின் அடிப்படையில் குடிமக்களுக்கு எதிராக வேறுபாடு காட்டாதீர்கள்.

3. மதச் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் பெறப்பட்ட தகவல்/புகார்களை அலட்சியப்படுத்தவோ அல்லது நடவடிக்கையைத் தாமதப்படுத்தவோ செய்யாதீர்கள்.

7. மதத் தொடர்புடைய சிறுபான்மையினரை மட்டுமே குறிக்கிறது.

❖❖❖

# அத்தியாயம் - 8

## கட்டாய/கொத்தடிமை தொழிலும் காவல் பணியும்

இந்திய அரசியல் அமைப்பின் பிரிவுக் கூறு 23, பிச்சையெடுப்பதையும் அதைப் போன்ற மற்ற கட்டாயத் தொழிலையும் தடை செய்கிறது. கொத்தடிமைத் தொழில் முறை (ஒழிப்பு) சட்டம் 1976-ன் கீழ் கொத்தடிமைத் தொழிலாளர்களை அடையாளம் கண்டு அவர்களை விடுவிப்பது, அவ்வாறு விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களின் மறுவாழ்வு ஆகியவை சம்பந்தப்பட்ட மாநில அரசின் நேரடிப் பொறுப்பாகும்.

## செய்ய வேண்டுவன

1. உங்கள் காவல் பகுதியில் கட்டாய கொத்தடிமை தொழில் நடைமுறைகள் பற்றி கண்காணிப்புடன் இருந்து, அத்தகைய குற்றச்சாட்டுகள் வரும் நிலையில், உரிய நேரத்தில் மாவட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தவும்.

2. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களைப் பணியிடத்திலிருந்து மீட்பதில் மாவட்ட அதிகாரிகளுக்கு உதவி

செய்யுங்கள்.

3. தொழிலாளர்கள் குழந்தைகள், பெண்கள், சிறுபான்மையோர் மற்றும் எஸ்சி/எஸ்டி போன்ற சமுதாயத்தின் நலிவுற்ற பிரிவினராக இருந்தால் (பல்வேறு சட்டங்களின் கீழ்) அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவும்.

## செய்யக் கூடாதன

1. கொத்தடிமைத் தொழில் முறை (ஒழிப்பு) சட்டம் 1976–ன் வழிவகைகளின் கீழ், குற்றவியல் நீதிபதி ஒருவர் மூலம் சரியான விசாரணையின்றி தொழிலாளர்களை விடுவிக்கப் பெறாதீர்கள்.

2. நிதி சம்பந்தப்பட்ட விவகாரங்களைத் தீர்த்து வைப்பதில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளாதீர்கள்.

3. கொத்தடிமைத் தொழில் முறை நிலவுவதைப் பற்றிய விசாரணையின் பொழுது நீதி சார்ந்த கருத்துக்களை வெளியிடாதீர்கள்.

4. கஷ்டத்திற்கு ஆளான தொழிலாளர்கள் முன் தான்தோன்றித்தனமாக நடந்துகொள்ளாதீர்கள்.

❖❖❖

# அத்தியாயம் - 9

## என்கவுன்டெர்

காவல் துறையினரின் நடவடிக்கைகளின் கண்ணோட்டத்தில் காவலர்கள் எப்பொழுது துப்பாக்கி போன்ற, இறப்பை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களின் பலத்தை, ஆயுதம் ஏந்தி, சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர்/குற்றம் புரிவோர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கிறார்களோ அந்த சூழ்நிலையே பொதுவாக “என்கவுன்டெர்” என்று குறிப்பிடப்படுகிறது. அத்தகைய சூழ்நிலைகளில் காவல் துறையினரால் பொதுவாக தற்காப்பிற்காகவே பலப்பிரயோகம் நாடப்படுகிறது.

## செய்ய வேண்டுவன

1. ஆயுதம் ஏந்தி, சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர் / குற்றம் புரிவோர்களை எதிர்

கொள்ளும் வேளையில் முதலில் அவர்களுக்குச் சவால் விடுத்து சரணடையச் சொல்லுங்கள்.

2. யாருடைய செயல்பாடுகள் உங்களுக்கோ மற்றவர்களுக்கோ இறப்பையோ அல்லது படுகாயத்தையோ ஏற்படுத்திவிடும் என்ற நியாயமான பயத்தை உண்டாக்குகிறதோ, அத்தகைய தாக்குதல் நடத்தும், சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர்/குற்றம் புரிவோர்களின் செயல்பாடுகளில் இருந்து உங்களையும் மற்றவர்களையும் பாதுகாக்க தற்காப்பு அளவிலான பலத்தை மட்டும் பிரயோகிக்கவும்.

3. தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கும் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர்/ குற்றம் புரிவோர்களின் செய்கைகள் அல்லது செய்யப்போவதாக விடுக்கும் மிரட்டல்கள் உடலுக்கு ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்ற நியாயமான பயத்தை எப்பொழுது உண்டாக்குகிறதோ அப்பொழுதுதான் தற்காப்பிற்கான பலப் பிரயோகம் செய்யத்

தொடங்கவேண்டும். மேலும் அத்தகைய, உடலுக்கு ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்ற பயம் எவ்வளவு நேரத்திற்கு நீடிக்கிறதோ அவ்வளவு நேரத்திற்கு மட்டுமே தற்காப்பிற்காக பலப்பிரயோகம் செய்வதைத் தொடரவேண்டும். (பிரிவு 102, இ.த.ச).

4. தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கும் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர்/ குற்றம் புரிவோர்களின் ஒரு தாக்குதல் உங்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ இறப்பையோ அல்லது படுகாயத்தையோ ஏற்படுத்திவிடும் என்ற நியாயமான பயத்தை உண்டாக்கினால் மட்டுமே இறப்பையோ அல்லது ஏதேனும் கெடுதலையோ ஏற்படுத்தக்கூடிய அளவிலான பலத்தை மட்டுமே தற்காப்பிற்காக பிரயோகம் செய்யவும். (பிரிவு 100, இ.த.ச).

## செய்யக் கூடாதன

1. சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர்/ குற்றம் புரிவோர்கள் ஆயுதங்களை

ஏந்தியிருப்பதைப் பார்த்த மாத்திரத்திலேயே துப்பாக்கி சூடு நடத்துவதை நாடாதீர்கள்.

2. அளவுக்கு மீறிய பலத்தைப் பிரயோகிக்காதீர்கள். பலத்தின் தன்மையும் அளவும், தாக்குதல் நடத்தும், சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர்/குற்றம் புரிவோர்கள் பிரயோகிக்கும் பலத்தின் தன்மைக்கும் அளவிற்கும் சரியான விகிதத்தில் இருக்க வேண்டும்.

3. உங்கள் உடலையும் மற்றவர்கள் உடல்களையும் பாதுகாத்துக் கொள்ளத் தேவையான பலத்திற்கு மேல், அதிகக் கெடுதல்களை தாக்குதல் நடத்தும், சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர்/ குற்றம் புரிவோர்களுக்கு உண்டாக்கும் அளவு பலத்தை பிரயோகப்படுத்தாதீர்கள். (பிரிவு 99, இ.த.ச).

❖❖❖

# அத்தியாயம் – 10

## தீவிரவாதமும் காவல் பணியும்

தீவிரவாதம், கடுங்கோபத்தை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகளில் காவலர்கள் சமச்சீரான அணுகு முறையைக் கையாள வேண்டிய அவசியத்தை உருவாக்கும் ஒரு உச்சபச்ச சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனை ஆகும். தீவிரவாதத்தைக் கையாள்வது என்பது தீவிரவாதச் சம்பவங்கள் குறித்து விசாரணை மேற்கொள்வது, தீவிரவாதிகளைக் கைது செய்ய தடுப்பு வளையம் அமைத்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது, ROP (சாலைத் திறப்புக் குழு) பணிகள், சாதாரண மக்களைச் சோதனையிடுவது, சோதனை மையம் (Naka) முதலிய காவல் துறை நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும்.

## செய்ய வேண்டுவன

1. சம்பந்தப்பட்ட பகுதியின் உள்ளூர் வாசிகளுடன் நல்லுறவை வைத்துக் கொள்ளவும். தீவிரவாதிகள் மற்றும் அவர்களுடைய நடவடிக்கைகள் பற்றிய தகவல்களைப் பெறுவதில் அது உதவியாக இருக்கும்.

உள்ளூர்வாசிகளுடனான நல்லுறவு என்பது, பல சந்தர்ப்பங்களில் தீவிரவாதிகளால் பாதிப்புக்கு உள்ளான பகுதிகளில் காவல் துறை நடவடிக்கைகளால் சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனையில் பதட்டத்தைத் தணிக்கவும் உதவியாக இருக்கும்.

2. சந்தேகத்திற்குரிய வீட்டை சோதனையிடும் பொழுது, உள்ளூர் முகவர்கள் சிலர, அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்து கொண்டு, உடன் வைத்துக்கொள்ள வேண்டும்.

3. பொது இடங்களில் சாதாரண மக்களிடம் உடல் சோதனை நடத்தும் பொழுது அவர்கள் உரிய பண்புடன் நடத்தப்பட வேண்டும். பெண்கள், பெண் காவலர்களால் மட்டுமே, நாகரீகத்தை கடும் கவனத்தில் கொண்டு, சோதனை செய்யப்பட வேண்டும்.

4. தேடுதல் நடவடிக்கைகளின் பொழுது அல்லது சோதனைமையப் பணிகளின் பொழுது பெண்களை உச்சபச்ச மரியாதையுடன் நடத்தவும். வயது முதிர்ந்தவர்களும் குழந்தைகளும் கருணையுடன் நடத்தப்பட வேண்டும்.

5. கைது செய்யப்பட்ட சட்ட விரோதச் செயல்களில் ஈடுபட்ட அல்லது குற்றம் புரிந்த

ஒருவரின் உரிமைகள் எவ்வகையில் பேணப்படுகிறதோ அவ்வகையிலேயே கைது செய்யப்பட்ட ஒரு தீவிரவாதியின் உரிமைகளும் பேணப்பட வேண்டும்.

6. ஆயுதம் ஏந்திய தீவிரவாதிகளை எதிர்கொள்ளும் வேளையில் முதலில் அவர்களுக்குச் சவால் விடுத்து அவர்களைச் சரணடையச் சொல்லுங்கள். உங்களுக்கோ மற்றவர்களுக்கோ இறப்போ அல்லது படுகாயமோ ஏற்பட்டுவிடும் என்ற நியாயமான பயம் எப்பொழுது உண்டாகிறதோ அப்பொழுதுதான் தற்காப்பிற்கான பலப்பிரயோகம் செய்யத் தொடங்க வேண்டும்.

7. காவல் துறையினரின் நடவடிக்கைகளின் பொழுது சாதாரண மக்களுக்கும் அவர்களின் உடமைகளுக்கும் பாதுகாப்பை முன்னிட்டு ஏற்படக்கூடிய சேதங்களை குறைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

## செய்யக் கூடாதன

1. என்கவுன்டெர்/தேடுதல் நடவடிக்கைகளின் பொழுது தீவிரவாதிகளுக்கு எதிராக சாதாரண மக்கள் பாதுகாப்புக் கவசமாகப்

பயன்படுத்தப்படக்கூடாது.

2. கைது செய்யப்பட்ட தீவிரவாதியிடமிருந்து தகவல்களை வலியப்பெற உடல் அல்லது மன ரீதியான சித்தரவதையைப் பயன்படுத்தக் கூடாது.

3. தீவிரவாதிகள் அல்லது அவ்வாறு சந்தேகப்படும் நபர்கள் சட்ட விரோதமாக அடைத்து வைக்கப்படக் கூடாது.

4. ROP பணிகள் அல்லது தேடுதல் நடவடிக்கைகளின் பொழுது உள்ளூர் பொது மக்களிடம் உணவு கொடுக்கச் சொல்லியோ அல்லது வேறு வசதிகளையோ கேட்காதீர்கள்.

5. தீவிரவாதச் சம்பவம் ஒன்று நடந்த பிறகு அளவுக்கு மீறிய வெளிப்பாட்டைத் தவிர்க்கவும். சம்பவம் நடந்த இடத்தைச் சுற்றியுள்ள சாதாரண மக்கள் தேவையில்லாமல் துன்புறுத்தப்படக் கூடாது.

Translated by:
**டி.வி. சமயாம்பிகை.**

❖❖❖

सर्वे भवन्तु सुखिनः

**தேசிய மனித உரிமைகள் ஆணையம்**
ஃபரித்கோட் ஹவுஸ், கோபர்னிகஸ் மார்க்,
புது தில்லி -110 001 (இந்தியா)
டெலிபோன் : 011-23385368 பேக்ஸ் : 011-23384863
E-மெயில்: covdnhrc@nic.in வெப்சைட்: www.nhrc.nic.in